சார்பு நீதிமன்றம், பரமத்தி.
முன்னிலை திரு.எஸ்.நளினகுமார், பி.ஏ.பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12–ஆம் நாள் செவ்வாய்கிழமை

IA.5/2025, IA.6/2025, IA. 7/2025 in O.S.No. 66/2020

சண்முகம் ... மனுதாரர்/பிரதிவாதி

/ எதிர் /

கொழந்தைவேலு ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனுக்கள் 22.07.2025–ஆம் தேதியன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திருமதி.பி.மணிமேகலை அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.டி.சீனிவாசன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இது நாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

## பொதுவான உத்தரவு

இம்மனுக்கள், அசல் வழக்கில் வாதி தரப்பில் கடந்த 02.04.2025–ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்றும் மேற்படி தேதியில், PW1 to PW3 சாட்சிகள் முடிக்கப்பட்டதை Re open செய்யவேண்டும் என்றும் PW1 to PW3 சாட்சிகளை மீண்டும் குறுக்கு விசாரணை செய்ய Recall செய்ய அனுமதி அளித்து உத்தரவிடவேண்டும் என்று கோரி, கட்டளை 9, விதி 7, கட்டளை 18, விதி 17, மற்றும் 151 C.P.C.–ன் கீழ் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

2. <u>3–மனுக்களின் சுருக்கம்,</u>

மனுதாரர் இம்மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் பிரதிவாதி. அசல் வழக்கு அண்டிமான்டின் பேரில் தொகை கிடைக்கவேண்டும் என்று கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வழக்கில் PW1 to PW 3 சாட்சியங்களை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக 02.04.2025–தேதியில் வாய்தா போடப்பட்டிருந்தது. மேற்படி வாய்தா தேதியில் மனுதாரர் வழக்கிறஞர் நாமக்கல் நீதிமன்றத்திலிருந்து, இந்நீதிமன்றத்திற்கு வர காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. இந்நிலையில், இந்நீதிமன்றத்தில் மனுதாரரைப்பொறுத்து மேற்கண்ட சாட்சியங்களை குறுக்கு விசாரணையை செய்யாததால் PW1 பக்கம் விசாரணையை முடித்தும், மனுதாரரைப் பொறுத்து ஒருதலைபட்ச உத்தரவு செய்தும் வாதி தரப்பு வாதுரைக்காக 08.04.2025–அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் PW1 to PW 3 சாட்சிகளை மனுதாரர் வழக்கறிஞர் மூலம் குறுக்கு விசாரணை செய்ய தயாராக உள்ளார். மேற்படி சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்யாதது வேண்டுமென்றே ஏற்பட்ட தவறல்ல. போனபைடாக ஏற்பட்ட ஒன்றாகும். ஆதலால், கடந்த 02.04.2025–ம் தேதியில் மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்யவேண்டும் என்றும் கடந்த 02.04.2025–தேதியில் PW1 to PW 3 சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளதை Reopen செய்யவும், PW1 to PW 3 சாட்சியங்களை குறுக்கு விசாரணை செய்ய Recall செய்ய உத்தரவிடவும் வேண்டியது அவசியமாகிறது. இல்லாத பட்சத்தில் மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத பெருத்த கஷ்ட, நஷ்டம் ஏற்பட்டுவிடும் என்று கூறி, இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. 3–<u>மனுக்களிலும் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைச்சுருக்கம்,</u>

மனுதாரரின் மனு பொய்யும், மோசடியும் ஆனது. சட்டப்படிக்கும், நியாயப் படிக்கும் நிலைக்கத்தக்கதல்ல. இந்த எதிர்மனுதாரர் வியக்தமாய் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவைகளே மனுதாரர்களே நிரூபிக்க வேண்டும். மனுச்சங்கதிகள் மறுக்கப்படுகின்றன. கட்டளை 9, விதி 7, கட்டளை 18, விதி 17 மற்றும் பிரிவு 151–சிபிசி தவறாக புரிந்து கொள்ளப்பட்டுள்ளது. மனுதாரர் தற்போதைய நிலையில், இம்மனுக்களை தாக்கல் செய்ய உரிமையில்லை. மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள்

உண்மையில்லை. மனுவில் மனுதாரரின் வழக்கறிஞர் நாமக்கல் நீதிமன்றத்திலிருந்து, இந்நீதிமன்றத்திற்கு வர காலதாமதம் ஆகிவிட்டதால், மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக சொல்லியுள்ளது உண்மையில்லை. உண்மையில், மனுதாரரின் வழக்கறிஞர் ஆஜராகியிருந்தார். அவர், 3–சாட்சிகள் ஆஜராகியிருந்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை. அதனால், ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆகவே, மனுவில் சொல்லியுள்ள காரணமும், உத்தரவில் குறிப்பிட்டுள்ள காரணமும் வேறுபட்டுள்ளது. அதனால், இம்மனுக்களை தள்ளுபடி செய்யவேண்டும். வழக்கை காலதாமதப்படுத்தவேண்டும் என்ற நோக்கத்தில் இம்மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுக்களை அனுமதித்தால் எதிர்மனுதாரருக்கு ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும். ஆகவே, இம்மனுக்களை தள்ளுபடி செய்ய வேண்டுமென்று ஆட்சேபனை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டியது, மனுதாரர் கூறியுள்ள காரணங்கள் ஏற்று, இம்மனுக்கள் அனுமதிக்கக்கூடியதா என்பதாகும்.

தீர்வு

5. மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதத்தில், அசல் வழக்கில் வா.சா.1–முதல் 3–வரையான சாட்சிகளை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்வதற்காக கடந்த 02.03.2025–தேதியில், வாய்தா இடப்பட்டிருந்தபோது, மனுதாரரின் வழக்கறிஞர் நாமக்கல் நீதிமன்றத்திலிருந்து, இந்நீதிமன்றத்திற்கு வர காலதாமதம் ஏற்பட்டுவிட்டது. அதனால், அசல் வழக்கில் மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, வா.சா.1–முதல் 3–வரையான சாட்சிகளின், சாட்சியம் முடிக்கப்பட்டுவிட்டது என்றும் மேற்படி மனுதாரருக்கு எதிராக பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை ரத்து செய்து, வா.சா.1–முதல் 3–வரையான சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்வதற்காக அவர்களை மீண்டும் வரவழைக்கவேண்டும் என்று வாதிட்டார்.

6. எதிர்மனுதாரர் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தன் வாதத்தில், மனுதாரரின் மனு அபிடவிட்டில், மனுதாரரின் வழக்கறிஞர் நாமக்கல் நீதிமன்றத்திலிருந்து, இந்நீதிமன்றத்திற்கு வர காலதாமதமாகிவிட்டதால், மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக சொல்லியுள்ளது உண்மையில்லை என்றும் உண்மையில், மனுதாரரின் வழக்கறிஞர் ஆஜராகியிருந்தும், சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றும் எனவே, இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவுக்கு மாறாக, காரணங்களை சொல்லியுள்ளது உண்மையில்லை என்றும் எனவே, இம்மனுக்களை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டார்.

7. இரு தரப்பு ஆவணங்களும், வாதங்களும் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

8. மனுதாரர் அசல் வழக்கில் பிரதிவாதி. எதிர்மனுதாரர் அசல் வழக்கில் வாதி. அசல் வழக்கு புரோநோட்டின்பேரில் மனுதாரர் பெற்ற கடனை திருப்பிச்செலுத்த வேண்டும் என்று கோரி எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அசல் வழக்கில் எதிர்மனுதாரர் தரப்பில் வா.சா.1–முதல் 3–வரையான சாட்சிகள் முதல் விசாரணை செய்யப்பட்டு, பின்னர் குறுக்கு விசாரணைக்காக வாய்தா இடப்பட்டபோது, மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முன்வராததால் அவருக்கு எதிராக கடந்த 02.04.2025–தேதியில், ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, வா.சா.1–முதல் 3–வரையான சாட்சிகளின் சாட்சியமும் முடிக்கப்பட்டுள்ளது.

9. மேற்படி தேதியில், வா.சா.1–முதல் 3–வரையான சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாததற்கு காரணமாக மனுதாரரின் வழக்கறிஞர் நாமக்கல் நீதிமன்றத்திலிருந்து, இந்நீதிமன்றத்திற்கு வர காலதாமதம் ஆகிவிட்டது என்று கூறப்பட்டுள்ளது. ஆனால், கடந்த 02.04.2025–தேதியில் இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவில் மனுதாரர் தரப்பில் வா.சா.1–முதல் 3–வரையான சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய தயாராக இல்லை என்பதால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், வழக்கு ஆவணங்களை பரிசீலிக்கையில், வா.சா.1–கடந்த 02.09.2024–தேதியிலும், பின்னர், வா.சா.2, 3–

சாட்சிகள் 19.10.2024–தேதியிலும், முதல் விசாரணை செய்யப்பட்டு, பின்னர் குறுக்கு விசாரணைக்காக 28.10.2024, 06.11.2024, 20.03.2025, 26.03.2025, 02.04.2025–ஆகிய தேதிகளில் வாய்தா இடப்பட்டும் மனுதாரர் தரப்பில், மேற்படி சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யவில்லை. மனுதாரர் தரப்பில் மேற்படி 02.04.2025–தேதியில் தான் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்யாததற்கு காரணம் கூறப்பட்டுள்ளது. ஆனால், மேற்கண்ட மற்ற தேதிகளில் மேற்படி சாட்சிகளை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததற்கு காரணம் எதுவும் கூறப்படவில்லை. இவ்வழக்கு கடந்த 2020–ல் தாக்கல் செய்யப்பட்டு, தற்போது வரை மனுதாரரின் நடவடிக்கைகளால் விசாரணை முடிவு பெறாமல் உள்ளது. ஆனாலும், மனுதாரரின் நடவடிக்கைகளால், அசல் வழக்கில் காலதாமதம் ஏற்பட்டிருந்தாலும், அசல் வழக்கில் இரு தரப்பினருக்கும் உரிய வாய்ப்பு வழங்கவேண்டும் என்பதாலும் அவ்வாறு இரு தரப்பினருக்கும் உரிய வாய்ப்பு வழங்கி, அசல் வழக்கை முடிவு செய்தால் தான் இறுதியாக இருக்கும் என்பதாலும் இம்மனுக்களை செலவுத்தொகை விதித்து, அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது. மேற்கண்டவாறு மனுதாரரின் நடவடிக்கைகளால் அசல் வழக்கில் காலதாமதம் ஏற்பட்டுள்ளதாலும், அசல் வழக்கில் எதிர்மனுதாரரும், அவரின் சாட்சிகளான வா.சா.2, வா.சா.3–ஆகியோரும் பலமுறை இந்நீதிமன்றத்தில் ஆஜராகி, மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யாததால், எதிர்மனுதாரருக்கும், வா.சா.2, வா.சா.3–ஆகியோருக்கும் அதிக சிரமம் ஏற்பட்டுள்ளதாலும் அதற்கேற்ப, கீழ்க்கண்டவாறு அதிக செலவுத்தொகை விதித்து, இம்மனுக்களை அனுமதிக்கலாம் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவாக, IA.5/2025, IA.6/2025, IA.7/2025 ஆகிய இம்மனுக்கள் மனுதாரர் மொத்த செலவுத்தொகையாக ரூ.2,000/–த்தை, எதிர்மனுதாரருக்கு 02.09.2025–க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனுக்கள் அனுமதிக்கப்படும் என்றும், தவறும் பட்சத்தில், இம்மனுக்கள் தள்ளுபடி செய்யப்படுமென்றும் உத்தரவிடப்படுகிறது. வாய்தா – 02.09.2025.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2025–ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 12–ம் நாள் அவையறியத் தீர்ப்பு பகரப்பட்டது.

S NALINAKUMAR
Digitally signed by S NALINAKUMAR
Date: 2025.08.12 12:32:24 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.

<u>மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிய மற்றும் சான்றாவணங்கள்</u>

இல்லை.

S NALINAKUMAR
Digitally signed by S NALINAKUMAR
Date: 2025.08.12 12:32:29 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.